வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 33/2023

வழக்கு சாட்சி LW5 /PW5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இளங்கோ | ஜாதி | |
| கணவர்/தந்தை | ஞானபிரகாசம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 29 |

தேதி 25.02.2025

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் மணலி பகுதியில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். 29.09.2022 அன்று மதியம் பால்பண்ணை காவல் நிலைய உதவி ஆய்வாளர் விபத்து தொடர்பாக விசாரணை செய்தபோது என்னிடம் மேற்படி கையொப்பத்தினை பெற்றார். நான் செய்து கொடுத்தேன். மேற்படி கையொப்பமானது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

எனது முகவரி என்னவென்றால் குட்டியப்பன் தெரு, எடப்பாளையம். இறந்தவர் எனது தெருவை சேர்ந்தவர் என்றால் ஆமாம். எனவேதான் போலீசார் என்னை அழைத்து விசாரணை செய்தார்கள் என்றால் ஆமாம். நான் கையொப்பம் செய்ததில் என்ன எழுதியிருந்தது என்றால் தெரியாது.

**மறுவிசாரணை இல்லை.**